1989 மே 2]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) செங்கை—அண்ணா மாவட்டம் மதுராந்தகம் வட்டம் சவரம்பாக்கம் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி துவக்கக் கோரி மனு ஏதும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆதி திராவிட மாணவ மாணவியர்கள் கல்வி உபகாரச் சம்பளம் பெறுவதற்கு வருமான வரம்பை உயர்த்துதல்

182—(*வினா எண்: 2061) திரு. இளம்வழுதி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள் கல்வி உபகாரச் சம்பளம் பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பை உயர்த்த அரசுக்குக்கோரிக்கைவந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவா அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பெற்றோர் பாதுகாவலரின் ஆண்டு வருமான உச்ச வரம்பாகிய ரூ. 12,000-ஐ உயர்த்துவதற்கு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசின் கல்வி உதவித் தொகை பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான உச்ச வரம்பினை 1989-90ஆம் கல்வியாண்டிலிருந்து ரூ. 12,000-ல் இருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழுது முடிக்கும் முன்னரே குழந்தையின் பசி அறிந்து பாலூட்டும் தாயைப் போல் விளங்குகின்ற நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நான் இந்தக் கேள்வியைக் கேட்டு அது அட்மிட் ஆவதற்குள் இந்த 12,000-மாக இருந்த வருமான வரம்பை ரூ. 15,000-மாக உயர்த்தி அறிவித்து விட்டார்கள். அதற்காக எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அடுத்து மத்திய அரசு நிர்ணயித்து உள்ள வருமான வரம்பை மேலும் உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இதற்கு மேலே அந்த உச்ச வரம்பை உயர்த்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகப்பேறு இல்லங்களுக்கு செவிலியர்கள் நியமித்தல்

183—(*வினா எண். 113)—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் உள்ள மகப்பேறு இல்லங்களுக்கு செவிலியர்கள் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, தற்பொழுது 8,558 கிளை சுகாதார நிலையங்கள் (மகப்பேறு இல்லங்கள்) தமிழ் நாட்டில் செயல் பட்டு வருகின்றன. எல்லா கிளை சுகாதார நிலையங்களிலும் மகப்பேறு உதவியாளர் (செவிலியர்கள்) ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய செங்கற்பட்டு தொகுதியில் பாண்டூர், அஞ்சூர், மழுவதூர் போன்ற பகுதிகளில் மகப்பேறு இல்லங்கள் நிறுவப்பட்டு கடந்த 4, 5 ஆண்டுகளாக அவை திறக்கப்படாமலே இருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா செவிலியர் நியமனத்தை குறித்தது. இருந்தாலும் அங்கே மருத்துவ மனைகள் திறக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நான் முன்பே இந்த மன்றத்திலே பதில் அளித்திருக்கிறேன். பல இடங்களில் இதுபோன்ற மருத்துவமனைகள் திறக்கப்படாமல் இருப்பதாக குறிப்புகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அவைகளைத் திறப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும், எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வீ. தமிழ்மணி : துணைக் கேள்வி செவிலியர் தொடர்பாக வரவேண்டும்.

திரு. வீ. தமிழ்மணி : தலைவர் அவர்களே, கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பாக ஐ.என்.பி திட்டத்தின் மூலமாக இந்த மகப்பேறு இல்லங்கள் கட்டப்பட்டு 5, 6 ஆண்டுகளாக அவை திறக்கப்படாமல் இருக்கின்றன. அதற்கு செவிலியர்கள் இதுவரையில் நியமிக்கவில்லை. என்பதையாவது அரசு அறியுமா? அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதைஅறிய விரும்புகிறேன்.